**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No:CC.219/2021**
**Prosecution Witnesses: 5**

| | | | |
|---|---|---|---|
| Name | : **நாகராஜ்** | Caste | : |
| Father Name/ Husband Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(29.09.2025)**

**முதல் விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் எழியார்பத்தியில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனாராக பணிபுரிந்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். கடந்த 03.07.2017 ஆம் ஆண்டு எழியார்பத்தி கோப்பம்மாள் கோவில் படுத்திருந்த ஒரு பாட்டி மீது கார் ஏறி விபத்து ஏற்பட்டது. அதுசம்பந்தமாக போலிசார் விசாரணை செய்து படம் வரைந்து பார்வை மகசர் தயார் செய்தனர். அந்த பார்வை மகசரில் நான் கையெழுத்து போட்டேன். மேற்படி பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் கு.வி.**

அ.சா.1 மலைச்சாமி எனது பெரியப்பா மகன் ஆவார். நாங்கள் எல்லாம் ஒரே தெருவில் வசிக்கிறோம். எந்த ஒரு விஷயமாக இருந்தாலும் எனது பெரியப்பா கூப்பிட்டால் வந்துவிடுவோம். போலிஸ் ஸ்டேசனுக்கு போனோமா என்றால் போகவில்லை. சம்பவம் நடந்த அன்றே போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள் எவ்வளவு நேரத்தில் போலிசார் சம்பவயிடத்திற்கு

வந்தார்கள் என்றால் சிலமணிநேரம் கழித்து வந்தார்கள். நான் கையெழுத்திட்ட பேப்பரில் கோப்பம்மாள் கோவிலும் 5 வீடுகளும் காட்டப்பட்டிருந்தது வேறு எதுவும் இல்லை. இவ்வழக்கில் இறந்துபோனவர் எனது பெரியப்பாவின் தாயார் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் நான் காவல் நிலையத்தில் தான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை.